நலிந்த கலைஞர்களுக்கு இந்த ஆண்டு முதல்

# கூடுதலாக 2500 கலைஞர்களுக்கு மாதம் ரூ.3000 நிதியுதவி - ஆணைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப்.7-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முதல் கூடுதலாக 2,500 கலைஞர்களுக்கு மாதம் 3,000 ரூபாய் நிதியுதவி ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் சார்பாக, தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாக நலிந்த கலைஞர்களுக்கு மாதம் தோறும் 3,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 6,542 நலிந்த கலைஞர்கள் மாதம் தோறும் 3,000ரூபாய்நிதியுதவிபெற்றுபயனடைந்து வருகின்றார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், நிதியுதவி பெற விண்ணப்பித்துள்ள தகுதி வாய்ந்த அனைத்துக் கலைஞர்களுக்கும் நிதியுதவி வழங்கிடும் வகையில், 2025-2026-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், இத்திட்டத்திற்காக கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட தெரிவுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட, தகுதிவாய்ந்த 2,500 நலிவுற்றநிலையில்வாழும்கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (5.9.2025) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முதல் கூடுதலாக 2,500 கலைஞர்களுக்கு மாதம் 3,000 ரூபாய் நிதியுதவி ஆணைகள் வழங்குவதன் அடையாளமாக 10 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர். க.மணிவாசன் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் மற்றும் கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் திருமதி. கவிதாராமு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






திருச்செந்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகராட்சி ஆய்வுக் கூட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர் மன்றத்தலைவர் சிவ ஆனந்திரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை, நகர் மன்ற உறுப்பினர்கள் மணல்மேடு சுதாகர், ஆனந்த், செந்தில் மற்றும் பலர், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் ஆகியோர் நேற்று முன்தினம் (5.9.2025) சிவகங்கை மாவட்டம், கானாடுகாத்தான் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தனியார் பங்களிப்புடன் கட்டப்பட்டுள்ள கிளை நூலகத்திற்கான புதிய கட்டிடத்தினை, சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப சிதம்பரம் முன்னிலையில், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். உடன் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, நன்கொடையாளர் திருமதி குமாராணி டாக்டர்.மீனா முத்தையா, கானாடுகாத்தான் பேரூராட்சி தலைவர் திருமதி ராதிகா, மாவட்ட நூலக அலுவலர் (பொ) திருஞானசம்பந்தம் உட்பட பலர் உள்ளனர்.

சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்

# மேலவெள்ளூர் ஏ.ஆர்.கே.தேவதாஸ் இல்லத் திருமணம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறுகிறது!

சிவகங்கை. செப். 7 –

சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஏ.ஆர்.கே. தேவதாஸ் – தே. விசாலாட்சி ஆகியோரின் புதல்வர் ஆர். கே.டி.செண்பகராஜ்–க்கும் திருப்புவனம் ஒன்றிய கவுன்சிலர் அ.ஈஸ்வரன் – ஈ.ஈஸ்வரி ஆகியோரின் புதல்வி ஏ.இ.தர்ஷணாவுக்கும் திருமணம் இன்று (07.09.2025 – ஞாயிற்றுக்கிழமை) காலை 10.45 மணியளவில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வேலம்மாள் மெட்ரிக் பள்ளி அருகில் உள்ள வேலம்மாள் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் மாவட்ட துணைச் செயலாளர் த. சேங்கை மாறன் வரவேற்புரையாற்றுகிறார்.

இம்மணவிழாவினை மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையேற்று நடத்திவைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஆ. தமிழரசி ரவிக்குமார், கார்த்திக் ப.சிதம்பரம் எம்.பி., முரசொலி செய்தியாசிரியர் கு.சேது, எஸ். மாரியப்பன் கென்னடி, எஸ். கார்த்திகேய சிவசேனாபதி, வசந்தி சேங்கைமாறன், ஏ.பி. ஆர். ரகுபதி, எஸ்.மோகன் குமார், பொன்.மு.சேது ராமலிங்கம், ஜி.காந்தையா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



இம்மணவிழாவில் அ.கணேசன், ஜோன்ஸ் ரூசோ, மேயர் சே. முத்து துரை, நா. குணசேகரன், பா. சின்னையா, நாகனி பா. செந்தில் குமார், கே. இராமகிருஷ்ணன், சி. பூரண சங்கீதா, வி.குமரேசன், வி. பிரபாவதி, எல்.பாலசுப்பிரமணியம், கே.கே.பாலதண்டாயுதம், எஸ். சிவதேவ்குமார், என். தம்பிபாலன், ஆர். ராமநாதன், என். சிவக்குமார், என். பனையப்பன், கே.சுப்பிரமணியன், தா.இராமையா, குரு. சிங்காரவேலன், ஏ.ஆர்.ஜெயமூர்த்தி, தெய்வாணை இளமாறன், தமிழ் பிரியா வேங்கை பிரபாகரன், பொன்.மணிமாறன், எஸ்.பி.சரவணன், சரவணா புவனேஸ்வரி, கே.ஜெயவேல், கார்மேகம் செல்வி, அ. மணிமுத்து, கே.சூர்ய கலாநிதி, பா.பாலரவிராஜன், எம்.பாண்டித்துரை, பி.கார்த்தி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

எஸ்.மகேந்திரன், பொன். இளங்கோவன், எஸ்.சுப்பையா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம் தாமலேரிமுத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் தாமலேரிமுத்தூர் பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் விழாவில் மாவட்டக் கழக செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் பெறுவதற்கான ஆணையை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், நகர செயலாளர் ம.அன்பழகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, ஒன்றிய நிர்வாகிகள் மு.க.தயாநிதி, மோகன், துளசி, ஒன்றிய கவுன்சிலர் கலாஆஞ்சி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.